26th March 1964]

VII.—GOVERNMENT BILLS—*cont.*

(4) THE MADRAS MINOR INAMS (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) AMENDMENT BILL, 1964.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg leave to introduce the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1964.

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1964."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

VIII.—GENERAL DISCUSSION ON FINAL SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1963-64.

MR. SPEAKER : Now, there will be general discussion on the Final Supplementary Statement of Expenditure.

* **திரு. வி. எஸ். எஸ். மணி:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1963–64-ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீடு அறிக்கையைப்பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அறிக்கையிலே மெட்ரிக் அளவைகள் எடைகளை அமுல் நடத்துவதற்கான செலவு நாற்பத்திரண்டாயிரத்து தொள்ளாயிரம் சொச்சம் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்தியத் துணைக் கண்டம் பூராவும் மெட்ரிக் முறையைக் கையாளவேண்டுமென்று இருக்கும்போது இந்தச் செலவை நாம் ஏன் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதை அமுல் படுத்த வேண்டிய கடமை, பொறுப்பு மத்திய அரசுக்குத்தான் உண்டு. மத்திய அரசு செலவு செய்யவேண்டியதை நாம் ஏன் செய்யவேண்டும்? ஏற்கனவே மைல், பர்லாங்கு, கஜம், அடி போன்ற முறை நம் நாட்டில் பழக்கம் ஆகிவிட்டபடியால் அதைத் திடீரென்று மாற்ற வேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன். மேல்நாடுகளில் கூட—குறிப்பாக பிரிட்டினில் கூட இன்னும் புட் பவுண்டு சிஸ்டம் தான் இருக்கிறது. அவர்கள் முன்னேறவில்லையா? நாம் ஏன் இப்படி அவசரமாக இந்த மெட்ரிக் முறையைக் கையாளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு இவ்வளவு செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. மத்திய அரசு வேண்டுமானால் இந்தச் செலவினங்களை ஏற்றுக்கொள்ளட்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக பொது நிர்வாக தலைப்பின் கீழ் ராமநாதபுரம் மாவட்டத்திலே அருப்புக்கோட்டை, மானாமதுரை ரயில் பாதைக்காக நில ஆர்ஜிதம் செய்யும் வேலைக்காக ரூபாய் 2 லட்சம் செலவு செய்திருக்கிறது. இந்தப் பெரும் தொகையையும் கூட நாம் ஏன்